1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது, பொதுப்பணித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உண்ணாவிரதம் பற்றி ஏன் என்றுகூட கேட்கவில்லை என்று சொன்னார்கள். நான் அமைச்சர். அதை ஏன் என்று கேட்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் நாகாவதி அணை.

335—(*வினா எண் 9032) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் நாகாவதி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற வாய்க்கால் கட்டுமானப் பணி முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், பாசன வசதி பெறும் கிராமங்கள் எவை எவை?

(இ) எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நாகாவதி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற வாய்க்கால் கட்டுமானப் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. இத்திட்ட வேலைகள் முழுவதையும் விரைவில் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) நாகாவதி திட்டத்தின்படி பாசன வசதி பெறும் கிராமங்களும், பயனடையும் பரப்பும் கீழ் வருமாறு:—

1. நாககாசன்அள்ளி	417.77 ஏக்கர்
2. சின்னம்பள்ளி	722.61 ஏக்கர்
3. பெரும்பாலை	852.62 ஏக்கர்.
மொத்தம்	1,993.00 ஏக்கர்

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுமார் 1,000 ஏக்கருக்கு மேல் நாகாவதி அணையில் தண்ணீர் பாசனம் நடக்கிறது. இன்னும் சில கால்வாய்களில் வேலை முடிக்கப்படாமல் இருக்கிறது. பல காண்ட்ராக்டர்கள் வேலையை முடிக்காமல் இருக்கிறார்கள். அதையெல்லாம் விரைவுபடுத்தி கால்வாய்களை கட்டி முடிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இன்னும் குறையாக—வேலை நடக்காமல் இருந்தால் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி உடனடியாக வேலையை முடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மூன்றாம்பள்ளம் அணை என்று இருக்கிறது. மூங்கில் மடுவுக்குப் பக்கத்தில் கிழக்குப் பக்கத்து வாய்க்கால் உடைந்திருக்கிறது. எனவே மூன்றாம்பள்ளம் அணையிலிருந்து வரும் கிழக்கு வாய்க்காலை உடனடியாக சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு அணைக்கட்டிலிருந்து வரும் கால்வாயைப்பற்றி கேட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி கேட்டால் சரியான பதில் சொல்லப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றாலுங்கூட எங்கள் தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த வாணியாறு அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டு, வாய்க்காலும் தொடங்கப்பட்டு, பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மதகுகள் சரியாக இல்லாத காரணத்தால் பாசனத்திற்கு முறையாகத் தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கீழே இருக்கிற சப்ளை சேனல் மூலம் ஏரிகளுக்கு பாசன வாய்க்கால்களில் முறையாக தண்ணீர் செல்லாமல் விவசாயிகள் பெரும் அவதிக்கு ஆளாகி

யிருக்கிறார்கள். எனவே அதை முறைப்படுத்தி, மதகுகளை ஒழுங்குபடுத்தி, பாசனத்திற்கு நீர் விடுவதையும் முறையாகச் செய்து விவசாயிகளுக்கு நல்ல வசதியைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு மதகில் குறை இருக்குமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆறு வுறுத்திச் சொல்லி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். தண்ணீர் விடுகிற பிரச்சினையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எங்கள் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் கலந்து பேசி ஒரு சுமுகமான நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்த ஓர் அறிவிக்கை குறித்து.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28—3—1987 அன்று நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என் சம்பந்தமான பிரச்சினை. அறைக்கு வாருங்கள் பேசலாம்.

(ஆ) முந்தைய நாள் நடைபெற்ற அலுவல் குறித்து.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of Order. நேற்றைய தினம் தாங்கள் நல்ல பரந்த மனப்பான்மையோடு, கருணை உள்ளத்தோடு 'ஆனந்த விகடன்' ஆசிரியருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது point of order அல்ல. என்னிடம் நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு). நீங்கள் என் முன் அனுமதியைக் கேட்கவில்லை. என்னை பேச வைத்து விட்டு பிறகு அதை நீக்குவது சரியல்ல. நானே பேசியதை